# வர்த்தகமும் சுற்றுலாவும்

## பன்னாட்டு வர்த்தகம்

வெளிநாட்டு வர்த்தகத்துறை, 1993 இல் ஏற்றுமதிகள், இறக்குமதிகள் ஆகிய இரண்டிலும் ஓர் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தைப் பதிவு செய்தது. 1993 இல் மொத்த ஏற்றுமதி வருவாய்கள் 1992 இன் சிஎஉ 2,950 இலட்சத்துடன் (20 சதவீதம்) ஒப்பிடுகையில் சிஎஉ 3,040 இலட்சத்தால் (17 சதவீதம்)* அதிகரித்து 1992 இல் அடைந்த ஏற்றுமதி வளர்ச்சி வேகத்தினைப் பேணியது. கைத்தொழில் ஏற்றுமதிகள் தொடர்ந்தும் விரிவடைந்தவேளையில் வேளாண்மை ஏற்றுமதிகள் 1992 இன் வீழ்ச்சியிலிருந்து ஓர் மீட்சியைப் பதிவுசெய்தன. இறக்குமதிகள் மீதான செலவும் 1993 இல் சிஎஉ 3,850 இலட்சம் (15 சதவீதம்) கொண்ட ஓர் கணிசமான அதிகரிப்பைப் பதிவுசெய்தது. 1992 இல் இது தொடர்பான அதிகரிப்பு சிஎஉ 2,500 இலட்சமாக (11 சதவீதம்) விளங்கியது. 1993 இல் முதலீட்டு மற்றும் நீண்ட பாவனைக்குரிய நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகளும் சார்புரீதியில் உயர்வான அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. இதனால் வர்த்தகப்பற்றாக்குறை 1992 இன் சிஎஉ 7,400 இலட்சத்திலிருந்து 1993 இல் சிஎஉ 8,220 இலட்சத்திற்கு சிஎஉ 820 இலட்சத்தினால் (11 சதவீதம்) அதிகரித்தது.

தற்காலிகச் சுங்கத்தரவுகளின்படி, மொத்த இறக்குமதிச்செலவு சிஎஉ 26,920 இலட்சமாகவும் (ரூ. 1,813,810 இலட்சம்) ஏற்றுமதி வருவாய்கள் சிஎஉ 20,480 இலட்சமாகவும் (ரூ. 1,379,940 இலட்சம்) விளங்கி 1993 இல் சிஎஉ 6,440 இலட்சம் (ரூ. 433,870 இலட்சம்) கொண்ட ஓர் வர்த்தகப் பற்றாக்குறையை விளைவித்தன. சுங்கத்தரவுகள் காலந்தாழ்த்திய பதிவிற்காகச் சீராக்கம் செய்யப்பட்ட பொழுது மொத்த இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் முறையே சிஎஉ 28,720 இலட்சம் (ரூ. 1,935,500 இலட்சம்) ஆகவும் சிஎஉ 20,510 இலட்சம் (ரூ. 1,381,750 இலட்சம்) ஆகவும் விளங்கின. இதனால் சீராக்கப்பட்ட தரவு 1992 இன் சிஎஉ 7,400 இலட்சம் (ரூ. 457,000 இலட்சம்) கொண்ட வர்த்தகப் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 1993 இல் சிஎஉ 8,220 இலட்சம் (ரூ. 553,750 இலட்சம்) கொண்ட வர்த்தகப் பற்றாக்குறையைப் பிரதிபலித்தது.

அட்டவணை 1.43

**வெளிநாட்டு வர்த்தகத்தின் செயலாற்றம் 1991 – 1993**

| ஆண்டு | | வளர்ச்சி வீதங்கள் | | வர்த்தகச் சுட்டெண்கள் (1985 = 100) | | விகிதம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஏற்றுமதிகள் | இறக்குமதிகள் | ஏற்றுமதி விலைகள் | இறக்குமதி விலைகள் | வர்த்தக மாற்று வீதம் | ஏற்றுமதிகள்/ இறக்குமதிகள் |
| 1991 (அ) | ... | 3.1 | 13.0 | 186.4 | 217.5 | 85.7 | 0.65 |
| 1992 (அ) | ... | 20.3 | 11.2 | 211.2 | 237.0 | 89.1 | 0.70 |
| 1993 (ஆ) | ... | 17.3 | 15.5 | 233.3 | 256.8 | 90.9 | 0.71 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை.
(ஆ) தற்காலிகமானவை.

மூலங்கள் : இலங்கைச் சுங்கம்,
இலங்கை மத்திய வங்கி.

* வேறுவகையாகக் கூறப்பட்டாலன்றி சதவீத மாற்றங்களும் பங்குகளும் சிஎஉ பெறுமதிகளின் நியதிகளிலேயே உள்ளன.

1993 இல் அனைத்து முக்கிய ஏற்றுமதிகளினதும் சராசரி ஏற்றுமதி விலைகள் முன்னேற்றமடைந்தன. பொதுவான ஏற்றுமதி விலைச்சுட்டெண் ரூபா நியதிகளில் 10.4 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு வேளாண்மை ஏற்றமதிகளில் ஏற்பட்ட 9.9 சதவீத அதிகரிப்பு, கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட 10.1 சதவீத அதிகரிப்பு, கனிப்பொருள் உற்பத்திகளின் விலைகளில் ஏற்பட்ட 3.1 சதவீத அதிகரிப்பு என்பனவற்றின் இணைந்த விளைவே காரணமாகும். பொதுவான இறக்குமதி விலைச்சுட்டெண் ரூபா நியதிகளில் 8.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்து இடைநிலை மற்றும் முதலீட்டுப்பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட முறையே 7.4 சதவீத, 14.7 சதவீத அதிகரிப்புக்களினதும் நுகர்வுப்பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட 1.1 சதவீதங்கொண்ட சிறிதளவு வீழ்ச்சியினதும் இணைந்த தாக்கத்தைப் பிரதிபலித்தது. இவ்விலை அபிவிருத்திகள் 1992 இன் வர்த்தகமாற்று விகிதமான 4.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1993 இல் 1.9 சதவீத முன்னேற்றத்தைப் பதிவுசெய்தன.

## ஏற்றுமதிகள்

மந்தமான பண்ட விலைகள், முக்கிய கைத்தொழில் நாடுகளில் நிலவிய தொடர்ச்சியான பின்னடைவு, மாற்றமடைகின்ற பொருளாதாரத்தில் காணப்பட்ட நிலையான சீராக்க இடர்ப்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்த பாதகமான வெளிநாட்டுக்காரணிகளின் மத்தியிலும் 1993 இல் இலங்கையின் ஏற்றுமதித்துறை நன்றாகச் செயற்பட்டது. மொத்த ஏற்றுமதிகள் 1992 இன் சிஎஉ 17,470 இலட்சத்திலிருந்து (ரூ. 1,078,550 இலட்சம்) 1993 இல் சிஎஉ 20,510 இலட்சத்திற்கு (ரூ. 1,381,750 இலட்சம்) 17 சதவீதத்தால் அதிகரித்தன. இச்சிறந்த செயலாற்றம் கைத்தொழில் ஏற்றுமதிகளில் காணப்பட்ட தொடர்ந்த விரிவாக்கத்தாலும், வேளாண்மை ஏற்றுமதிகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க மீட்சியாலும் ஏற்பட்டதாகும்.

பொதுவான ஏற்றுமதிச் செயலாற்றத்திற்கான முக்கிய தூண்டு விசையானது வேளாண்மை ஏற்றுமதிகளில் ஏற்பட்ட 9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 20 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்த கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்து உருவாக்கப்பட்டது. கைத்தொழில் ஏற்றுமதிகளின் கணிசமான வளர்ச்சிக்குப் புடைவைகள் மற்றும் ஆடைகள், ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் என்பனவற்றிலிருந்தான உயர்ந்த வருவாய்கள் பங்களிப்புக் காரணியாக விளங்கின. வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான அதிகரித்த வருவாய்கள் தேயிலை மற்றும் சிறு வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்து பெறப்பட்டதுடன், இது இறப்பர் மற்றும் தெங்கு உற்பத்திகள் என்பவற்றிலிருந்தான வீழ்ச்சியடைந்த வருவாய்களின் தாக்கத்தைப் போதுமான அளவிற்கு எதிரீடு செய்தது. கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான பெறுகைகளும் 1992 இல் பதிவு செய்யப்பட்ட 2 சதவீத வீழ்ச்சிக்கு முரணாக 1993 இல் 20 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்து குறிப்பிடத்தக்கதொரு மீட்சியைக் காட்டின.

1993 இல் ஏற்றுமதி அமைப்பினை கைத்தொழில் ஏற்றுமதிகளை நோக்கி நெறிப்படுத்துவதில் மேலும் முன்னேற்றம் காணப்பட்டது. மொத்த ஏற்றுமதிகளில் கைத்தொழில் ஏற்றுமதிகளின் பங்கு 1992 இன் 71 சதவீதத்திலிருந்து 1993 இல் 73 சதவீதத்திற்கு அதிகரித்திருக்கையில் வேளாண்மை ஏற்றுமதிகளின் பங்கு இவ்விரு

ஆண்டுகளுக்கிடையில் 25 சதவீதத்திலிருந்து 23 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. புடைவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகள் அதிகூடிய ஏற்றுமதி விடயமாக அதன் நிலையைத் தொடர்ந்தும் பேணி, மொத்த ஏற்றுமதி வருவாய்களின் 49 சதவீதத்திற்கு பங்களிப்புச்செய்தது.

அட்டவணை 1.44

**ஏற்றுமதிகள், இறக்குமதிகள், வர்த்தக நிலுவை 1982 – 1993**

பத்து இலட்சம் ரூபாய்களில் (சிஎஉ பத்து இலட்சம் அடைப்புக் குறிக்குள்)

| | சுங்கத் தரவு | | | சீராக்கப்பட்ட தரவு | | |
|---|---|---|---|---|---|---|
| | ஏற்றுமதிகள் க.ஏ.பெ. (அ) | இறக்குமதிகள் கொ.கா.க. (ஆ) | வர்த்தக நிலுவை | ஏற்றுமதிகள் | இறக்குமதிகள் | வர்த்தக நிலுவை |
| 1982 ... | 21,124<br>(919) | 36,876<br>(1,605) | - 15,751<br>(-686) | 21,454<br>(934) | 41,946<br>(1,826) | - 20,492<br>(-892) |
| 1983 ... | 25,183<br>(1,001) | 42,021<br>(1,670) | - 16,838<br>(-669) | 25,096<br>(998) | 45,558<br>(1,811) | - 20,461<br>(-813) |
| 1984 ... | 37,006<br>(1,419) | 46,913<br>(1,799) | - 9,908<br>(-380) | 37,347<br>(1,432) | 47,541<br>(1,823) | - 10,194<br>(-391) |
| 1985 ... | 35,035<br>(1,268) | 49,069<br>(1,776) | - 14,034<br>(-508) | 36,207<br>(1,311) | 54,049<br>(1,956) | - 17,843<br>(-646) |
| 1986 ... | 34,092<br>(1,036) | 51,282<br>(1,559) | - 17,189<br>(-523) | 34,072<br>(1,036) | 54,559<br>(1,658) | - 20,487<br>(-623) |
| 1987 ... | 39,861<br>(1,046) | 59,750<br>(1,568) | - 19,889<br>(-522) | 41,133<br>(1,080) | 60,528<br>(1,589) | - 19,396<br>(-509) |
| 1988 ... | 47,092<br>(1,101) | 70,320<br>(1,645) | - 23,228<br>(-543) | 46,928<br>(1,098) | 71,030<br>(1,661) | - 24,102<br>(-564) |
| 1989 ... | 55,511<br>(1,202) | 75,353<br>(1,631) | - 19,842<br>(-430) | 56,175<br>(1,216) | 80,225<br>(1,737) | - 24,050<br>(-521) |
| 1990 (இ) ... | 76,624<br>(1,408) | 105,559<br>(1,940) | - 28,936<br>(-532) | 76,624<br>(1,408 | 107,729<br>(1,980) | - 31,105<br>(-572) |
| 1991 (இ) ... | 82,225<br>(1,453) | 127,831<br>(2,258) | -45,606<br>(-806) | 82,225<br>(1,452) | 126,643<br>(2,237) | - 44,418<br>(-785) |
| 1992 (இ) ... | 107,509<br>(1,741) | 149,780<br>(2,425) | - 42,272<br>(-685) | 107,855<br>(1,747) | 153,555<br>(2,487) | - 45,700<br>(-740) |
| 1993 (ஈ) ... | 137,994<br>(2,048) | 181,381<br>(2,692) | -43,387<br>(-644) | 138,175<br>(2,051) | 193,550<br>(2,872) | -55,375<br>(-822) |

மூலங்கள் : இலங்கைச் சுங்கம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) மீள் ஏற்றுமதியின் பெறுமதியும் உட்பட.
(ஆ) தங்கக் கட்டிகளும் நாணயங்களும் நீங்கலாக.
(இ) திருத்தியமைக்கப்பட்டது
(ஈ) தற்காலிகமானவை
மாற்றல் வீதங்கள்

*1992 – 1 சிஎஉ = ரூ. 61.7541*
*1993 – 1 சிஎஉ = ரூ. 67.3860*

## தேயிலை

தேயிலை ஏற்றுமதி வருவாய்கள் 1992 இன் 24 சதவீத வீழ்ச்சியிலிருந்து 1993 இல் 23 சதவீத அதிகரிப்பிற்கு மீட்சியடைந்தன. 1993 இன் மொத்த ஏற்றுமதிகளில் 14 சதவீதத்திற்கும் வேளாண்மை ஏற்றுமதிகளின் பெறுமதியில் 63 சதவீதத்திற்கும் வகைகூறும் முக்கிய வேளாண்மை ஏற்றமதியாகத் தேயிலை தொடர்ந்தும் விளங்குவதனால் இது குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்பாகும். தேயிலை ஏற்றமதிகளின் பெறுமதி 1992 இன் சிஎஉ 2,410 இலட்சத்திலிருந்து (ரூ. 148,930 இலட்சம்) 1993 இல் சிஎஉ 2,960 இலட்சத்திற்கு (ரூ. 199,110 இலட்சம்) அதிகரித்தமைக்கு அதிகரித்த ஏற்றுமதி அளவும் மற்றும் முன்னேற்றமடைந்த விலைகளும் காரணமாகியது. அதிகரித்த உற்பத்தியின் காரணமாக ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 1992 இன் 1,820 இலட்சம் கிலோக்கிறாம்களிலிருந்து 1993 இல் 2,180 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 20 சதவீதத்தால் அதிகரித்தது. இதேவேளை அதிகரித்த கேள்வி காரணமாக சராசரி ஏற்றுமதி விலை இவ்விரு ஆண்டுகளுக்கிடையில் கிலோக்கிறாமிற்கு சிஎஉ 1.33 இலிருந்து (ரூ 81.98) கிலேக்கிறாமிற்கு சிஎஉ 1.35 இற்கு (ரூ. 91.16) 2 சதவீதத்தால் அதிகரித்தது. உயர்ந்தளவான கேள்வி 1993 இன் மொத்தத் தேயிலை ஏற்றுமதிகளில் 13 சதவீதத்திற்கு வகைகூறிய பொதுநலவாய சுதந்திர அரசுகளின் இறக்குமதிகளில் முக்கியமாகத் தெரிகின்றது.

தேயிலை ஏற்றுமதித்துறையின் குறிப்பிடத்தக்க செயலாற்றம், மீளாய்விற்குரிய காலப்பகுதியில் இடம்பெற்ற பல அமைப்பு மற்றும் முறைரீதியான மாற்றங்களால் ஏற்பட்டதாகும். 1993 இல் தேயிலைப் பெருந்தோட்டங்களில் 91 சதவீதம் தனியார்துறையால் முகாமைப்படுத்தப்பட்டதுடன், இவற்றில் சில கூட்டு நிலையங்கள் சிறந்த தரத்துடன் கூடிய அதிகளவான உற்பத்திகளை மேற்கொண்டதன் மூலம் தமது ஆற்றலை அதிகரிப்பதில் வெற்றி கண்டன. தேயிலை ஏற்றுமதி வர்த்தகத்தில் பங்குபற்றலை ஊக்குவிப்பதற்காக இலங்கைத் தேயிலைச் சபையால் பல நடைமுறைரீதியான மாற்றங்கள் நிறைவேற்றப்பட்டன. ஏற்றுமதிகளுக்கான அனுமதிகளைப் பெறவேண்டிய தேவையை நீக்கியதுடன் உற்பத்தியாளர்கள் ஏலம்விடும் முறை ஊடாகச் செல்லாது நேரடியாக கூட்டப்பட்ட பெறுமதியின் வடிவில் தேயிலையை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டனர். தேயிலை ஏற்றமதியாளர்களுக்கு உரிமம் வழங்குவதற்காக முன்பு விதிக்கப்பட்டிருந்த தேவைகளுட் சிலவும் தளர்த்தப்பட்டன. இதனால், பதிவு செய்யப்பட்ட தேயிலை ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கை 1992 இன் 246 இலிருந்து 1993 இல் 331 இற்கு அதிகரித்தது. பொதுநலவாய சுதந்திர அரசுகளிற்கான பெறுமதி கூட்டப்பட்ட தேயிலையின் ஏற்றுமதிகளை முன்னேற்றுவதற்காக ஓர் வட்டி உதவுதொகைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

## இறப்பர்

1993 இல் ஏற்றுமதிசெய்யப்பட்ட இறப்பரின் பெறுமதி 1992 இன் சிஎஉ 480 இலட்சத்திலிருந்து (ரூ. 29,600 இலட்சம்) சிஎஉ 460 இலட்சத்திற்கு (ரூ. 30,860 இலட்சம்) 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு ஏற்றுமதியின் அளவு 1992 இன் 786 இலட்சம் கிலோக்கிறாம்களிலிருந்து 1993 இல் 696 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமை முக்கிய காரணியாக விளங்கியது. எனினும்

ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட வீழ்ச்சியின் பாதகமான தாக்கம், சராசரி ஏற்றுமதிவிலை 1992 இன் கிலோக்கிறாமிற்கான சி.ஐ.உ 0.61 இலிருந்து (கி. கிறாமிற்கு ரூ. 37.65) 1993 இல் கிலோக்கிறாமிற்கு சி.ஐ.உ 0.66 இற்கு (கி. கிறாமிற்கு ரூ. 44,34) 8 சதவீதத்தால் அதிகரித்தமையால் ஓரளவில் எதிரீடு செய்யப்பட்டது. இறப்பரிலிருந்தான மொத்த வருவாய்களில் தட்டை மற்றும் லேட்டெக்ஸ் கிறேப் வகைகள் முறையே 48 சதவீதத்திற்கும் 34 சதவீதத்திற்கும் வகைகூறுகையில், கழிவு கிறேப் மற்றும் சோல் கிறேப் முறையே 10 சதவீதத்திற்கும், 6 சதவீதத்திற்கும் பங்களிப்புச் செய்தன.

## தெங்கு

தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 1992 இன் சி.ஐ.உ 600 இலட்சத்திலிருந்து (ரூ. 36,910 இலட்சம்) 1993 இல் சி.ஐ.உ 420 இலட்சத்திற்கு (ரூ. 27,960 இலட்சம்) 30 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. இது ஏற்றுமதி அளவு, மற்றும் விலை இரண்டிலும் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியால் ஏற்பட்டதாகும். ஏற்றுமதி அளவிற்குச் சமமான காய்களின் அளவு 1992 இன் 4,120 இலட்சம் காய்களிலிருந்து 1993 இல் 2,930 இலட்சம் காய்களுக்கு 31 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இது 1992 இல் தெங்கு உற்பத்தி செய்யப்படும் முக்கிய பகுதிகளில் நிலவிய வரட்சி நிலைமைகளால் உற்பத்தி வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து ஏற்பட்டது. இதே வேளையில் 1993 இல் காய் ஒன்றிற்கான சராசரி ஏற்றுமதி விலை 10 சதவீதத்தினால் காய்ஒன்றிற்கு சி.ஐ.உ 0.09 இற்கு வீழ்ச்சியடைந்தது.

1993 இல் சிலிர்ப்புத்தும்பு மற்றும் தும்புக்கயிறு என்பனவற்றை உள்ளடக்கிய தெங்குத் துணைஉற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களின் பெறுமதியும் 15 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

## சிறு வேளாண்மை உற்பத்திகள்

வேளாண்மை ஏற்றுமதித் துணைத்துறை, 1992 இல் பதிவுசெய்த குறிப்பிடத்தக்க செயலாற்றத்துடன் ஒப்பிடுகையில் 1993 இல் மிதமான வளர்ச்சியைக் காட்டியது. சிறு வேளாண்மை ஏற்றுமதிகளின் பெறுமதி 1992 இன் சி.ஐ.உ 800 இலட்சத்துக்கு (ரூ. 49,590 இலட்சம்) 1993 இல் சி.ஐ.உ 860 இலட்சத்துக்கு (ரூ. 58,250 இலட்சம்) 8 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும் இவ்வதிகரிப்பு மொத்த ஏற்றுமதிகளில் சிறு வேளாண்மை உற்பத்திகளின் பங்கைப் பேணுவதற்கு போதாது இருந்ததுடன் இவ்விரு ஆண்டுகளுக்கிடையில் இது 5 சதவீதத்திலிருந்து 4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. சிறு வேளாண்மை உற்பத்திகளிலிருந்தான மொத்த வருவாய்களில் முறையே 30 சதவீதத்திற்கும் 28 சதவீதத்திற்கும் வகைகூறிய தயாரிக்கப்படாத புகையிலை, கறுவா என்பனவற்றின் ஏற்றுமதிகள் 1993 இல் முறையே 2 சதவீத 8 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. வெற்றிலை, மிளகு, காய்கறிகள், முந்திரிப்பருப்பு, முக்கிய எண்ணெய்கள் என்பனவற்றிலிருந்தான வருவாய்களும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தன. மிளகு தவிர்ந்த ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு அதிகரித்தமையினாலும் முன்னேற்றமடைந்த பன்னாட்டு விலைகளினாலும் ஏற்பட்டதாகும். மிளகின் ஏற்றுமதிப் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு அதன் சராசரி ஏற்றுமதி விலைகளில்

ஏற்பட்ட வீழ்ச்சி ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட அதிகரிப்பினால் போதுமானளவிற்கு எதிரீடுசெய்யப்பட்டமையினால் தோன்றியதாகும்.

*அட்டவணை 1.45*

ஏற்றுமதிகளின் அமைப்பு 1991 – 1993

| வகை | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் | | | சி.எ.உ. பத்து இலட்சம் | | | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1991 | 1992 | 1993 (இ) | 1991 | 1992 | 1993 | 1991 | 1992 | 1993 |
| 1. வேளாண்மை ஏற்றுமதிகள் | 26,537 | 26,504 | 31,618 | 469 | 429 | 469 | 32.3 | 24.6 | 22.9 |
| 1.1 தேயிலை | 17,867 | 14,893 | 19,911 | 316 | 241 | 296 | 21.7 | 13.8 | 14.4 |
| 1.2 இறப்பர் | 2,641 | 2,960 | 3,086 | 47 | 48 | 46 | 3.2 | 2.7 | 2.2 |
| 1.3 தெங்கு. | 2,619 | 3,691 | 2,796 | 46 | 60 | 42 | 3.2 | 3.4 | 2.0 |
| 1.3.1 உள்ளீட்டு உற்பத்திகள் | 1,769 | 2,665 | 1,847 | 31 | 43 | 27 | 2.2 | 2.5 | 1.3 |
| 1.3.2 ஏனையவை | 850 | 1,026 | 949 | 15 | 17 | 14 | 1.0 | 1.0 | 0.7 |
| 1.4 சிறுவேளாண்மை உற்பத்திகள் | 3,409 | 4,959 | 5,825 | 60 | 80 | 86 | 4.1 | 4.6 | 4.2 |
| 2. கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதி (அ) | 50,736 | 76,699 | 100,420 | 896 | 1,242 | 1,490 | 61.7 | 71.1 | 72.7 |
| 2.1 புடவைகளும் ஆடைகளும் | 33,261 | 53,209 | 68,150 | 588 | 862 | 1,011 | 40.5 | 49.3 | 49.3 |
| 2.2 பெற்றோலிய உற்பத்திகள் | 3,289 | 2,771 | 3,801 | 58 | 45 | 56 | 4.0 | 2.6 | 2.7 |
| 2.3 ஏனையவை | 14,185 | 20,719 | 28,469 | 250 | 336 | 423 | 17.3 | 19.2 | 20.6 |
| 3. கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 2,562 | 2,749 | 3,653 | 45 | 45 | 54 | 3.1 | 2.5 | 2.6 |
| 3.1 இரத்தினக் கற்கள் | 2,358 | 2,482 | 3,402 | 42 | 40 | 50 | 2.9 | 2.3 | 2.5 |
| 3.2 ஏனையவை | 204 | 267 | 251 | 4 | 4 | 4 | 0.2 | 0.2 | 0.2 |
| 4. வகைப்படுத்தப்படாதவை (ஆ) | 2,390 | 1,903 | 2,484 | 42 | 31 | 37 | 2.9 | 1.8 | 1.8 |
| மொத்த ஏற்றுமதிகள் (அ) | 82,225 | 107,855 | 138,175 | 1,452 | 1,747 | 2,050 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) சீராக்கப்பட்டது
(ஆ) மீன் ஏற்றுமதிகள் உட்பட
(இ) தற்காலிகமானவை

மூலங்கள் : இலங்கைச் சுங்கம்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
இலங்கை மத்திய வங்கி

மாற்றல் வீதம் :

1991 – 1 சிஎஉ=ரூ. 56.6101
1992 – 1 சிஎஉ=ரூ. 61.7541
1993 – 1 சிஎஉ=ரூ. 67.3860

## கைத்தொழில் ஏற்றுமதிகள்

1993 இல் கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி 1992 இன் சிஎஉ 12,420 இலட்சத்துடன் (ரூ. 766,990 இலட்சம்) ஒப்பிடுகையில் சிஎஉ 14,900 இலட்சமாக (ரூ. 1,004,200 இலட்சம்) விளங்கி 20 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. கைத்தொழில் உற்பத்திகளின் முக்கிய வகைகளான புடைவைகளும் ஆடைகளும், பெற்றோலிய உற்பத்திகள் ஏனைய கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதிகள் என்பனவற்றில் உயர்ந்த வளர்ச்சி பதிவுசெய்யப்பட்டது. இவ்விரு ஆண்டுகளுக்கிடையில் புடைவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதி சிஎஉ 8,620 இலட்சத்திலிருந்து சிஎஉ

10,110 இலட்சத்திற்கு 17 சதவீதத்தால் அதிகரித்தது. அதிகரித்த ஏற்றுமதி அளவின் காரணமாகப் பெற்றோலிய ஏற்றுமதிகளின் பெறுமதி 1992 இன் சிஎஉ 450 இலட்சத்திலிருந்து 1993 இல் சிஎஉ 560 இலட்சத்திற்கு 24 சதவீதத்தால் அதிகரித்தது. இதேவேளை உணவு, குடிபானம் மற்றும் புகையிலை, வைரம், இரசாயன உற்பத்திகள், தோல் மற்றும் இறப்பர் உற்பத்திகள், பொறி மற்றும் பொறித்துணைக் கருவிகள் என்பனவற்றை உள்ளடக்கிய ஏனைய கைத்தொழில் உற்பத்திகளின் ஒன்று சேர்ந்த வருவாய்களும் 26 சதவீதத்தால் அதிகரித்தன.

### கனிப்பொருள் ஏற்றுமதிகள்

1992 இல் பின்னடைவிற்குள்ளான கனிப்பொருள் ஏற்றுமதிகள் 1992 இன் சிஎஉ 450 இலட்சத்திலிருந்து (ரூ. 27,490 இலட்சம்) 1993 இல் சிஎஉ 540 இலட்சத்திற்கு (ரூ. 36,530 இலட்சம்) 20 சதவீதத்தால் விரிவடைந்தன. இது முற்றாக இரத்தினக்கல் ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட விரிவாக்கத்தால் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் சிஎஉ 400 இலட்சத்திலிருந்து (ரூ. 24,820 இலட்சம்) சிஎஉ 500 இலட்சத்திற்கு (ரூ. 34,020 இலட்சம்) 25 சதவீதத்தால் அதிகரித்தமையால் ஏற்பட்டது. வெளிநாட்டில் சந்தையை முன்னேற்றும் நடவடிக்கைகள் குறிப்பாக சேர்மனியில் நடைபெற்ற "இன்கோன்ரா" இரத்தினக்கல் மற்றும் ஆபரண பொருட்காட்சியில் பங்குபற்றியமை இலங்கை இரத்தினக் கற்களுக்கு கணிசமானளவு கட்டளைகளைக் கவர உதவியதுடன் இது 1993 இல் இரத்தினக்கற்களின் ஏற்றுமதியின் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பிற்கும் பங்களிப்புச் செய்தது.

உலோகத்தாதுக்கள், இரும்புக்கந்தகம், இயற்கைக்காரீயம் என்பனவற்றை உள்ளடக்கிய ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகளின் பெறுமதி இவ்விரு ஆண்டுகளுக்கிடையில் சிஎஉ 40 இலட்சமாக மாறாது தொடர்ந்து காணப்பட்டது.

## இறக்குமதிகள்

சீராக்கப்பட்ட சுங்கத்தரவுகளின்படி இறக்குமதிகள் மீதான மொத்தச் செலவு 1992 இன் சிஎஉ 24,870 இலட்சத்திலிருந்து (ரூ. 1,535,550 இலட்சம்) 1993 இல் சிஎஉ 28,720 இலட்சத்திற்கு (ரூ. 1,935,500 இலட்சம்) 15 சதவீதத்தால் அதிகரித்தது. இது உந்து ஊர்திகள், ஈருருளிகள், வானொலிப்பெட்டிகள் மற்றும் தொலைக்காட்சிப்பெட்டிகள் போன்ற நீண்டகாலப் பாவனைப் பொருட்கள் (சிஎஉ 330 இலட்சம் அல்லது 15 சதவீதம்) வளமாக்கி, கோதுமைத்தானியம், புடைவைகள், மற்றும் ஆடைகள் போன்ற இடைநிலைப் பொருட்கள் (சிஎஉ 2,050 இலட்சம் அல்லது 15 சதவீதம்) போக்குவரத்துக்கருவிகள் மற்றும் பொறிகள் போன்ற முதலீட்டுப்பொருட்கள் (சிஎஉ 1,460 இலட்சம் அல்லது 24 சதவீதம்) என்பனவற்றின் இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பால் ஏற்பட்டதாகும்.

இறக்குமதிகளின் அமைப்பு 1993 இல் சிறிய மாற்றங்களை மட்டும் காட்டியது. இவ்விரு ஆண்டுகளுக்கிடையில் நுகர்வுப்பொருட்களின் பங்கு 21 சதவீதத்திலிருந்து 19 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருக்கையில் முதலீட்டுப்பொருட்களின் பங்கு 24 சதவீதத்திலிருந்து 26 சதவீதத்திற்கு அதிகரித்தது. இடைநிலைப்பொருட்களின் பங்கு 54 சதவீதத்தில் மாறாது தொடர்ந்து விளங்கியது.

## நுகர்வுப் பொருட்கள்

நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதிச்செலவு 1992 இன் சிஎஉ 5,210 இலட்சத்திலிருந்து (ரூ. 321,970 இலட்சம்) 1993 இல் சிஎஉ 5,550 இலட்சத்திற்கு (ரூ. 373,700 இலட்சம்) 6 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு முன்னைய ஆண்டைவிட 15 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்த நீண்டகால நுகர்வுப்பொருட்கள் மீதான அதிகரித்த செலவு காரணமாக விளங்கியது. இதேவேளை உணவு, குடிபானம் மீதான இறக்குமதிச்செலவு இவ்விரு ஆண்டுகளுக்கிடையில் சிஎஉ 2,980 இலட்சத்தில் மாறாது தொடர்ந்து விளங்கியது.

1993 இல் உணவு மற்றும் குடிபான வகையின் இறக்குமதிகளின் குறிப்பிடத்தக்க தன்மையாக அரிசி இறக்குமதிகளில் வீழ்ச்சியும் கோதுமை மா இறக்குமதிகளில் அதிகரிப்பும் காணப்பட்டது. அதிகரித்த உள்நாட்டு நெல் உற்பத்தி காரணமாக அரிசி இறக்குமதிகளின் அளவு இவ்விரு ஆண்டுகளுக்கிடையில் 237,223 மெற்றிக் தொன்களிலிருந்து 208,806 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தமையால் அரிசி இறக்குமதியின் பெறுமதி சிஎஉ 460 இலட்சத்திலிருந்து (ரூ. 28,520 இலட்சம்) சிஎஉ 350 இலட்சத்திற்கு (ரூ. 23,860 இலட்சம்) 24 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதேவேளை 1993 இல் சிஎஉ 80 இலட்சம் (ரூ. 5,520 இலட்சம்) பெறுமதியான கோதுமைமா பிஎல் 480 தலைப்பு 1 திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டது. 1991 இலும் 1992 இலும் கோதுமை மா எதுவும் இறக்குமதி செய்யப்படவில்லை.

ஏனைய நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகளின் பெறுமதி 1992 இன் சிஎஉ 2,240 இலட்சத்திலிருந்து (ரூ. 138,010 இலட்சம்) 1993 இல் சிஎஉ 2,570 இலட்சத்திற்கு (ரூ. 173,040 இலட்சம்) அதிகரித்தது. இவ்வகையில் இறப்பர் ரயர் மற்றும் ரியூப்புக்கள் (சிஎஉ 60 இலட்சம்), உந்து ஊர்திகள் மற்றும் ஈருருளிகள் (சிஎஉ 40 இலட்சம்), வானொலிப்பெட்டிகள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் (சிஎஉ 20 இலட்சம்), ஏனைய நுகர்வுப்பொருட்கள் (சிஎஉ 230 இலட்சம்) என்பனவற்றின் இறக்குமதிகளில் அதிகரிப்புக்கள் பதிவுசெய்யப்பட்டன. இதற்கு மாறாக மருந்து மற்றும் மருந்தாக்க உற்பத்திகளின் இறக்குமதிச்செலவு இவ்வாண்டில் ஓர் வீழ்ச்சியை (சிஎஉ 30 இலட்சம்) பதிவுசெய்தது.

## இடைநிலைப் பொருட்கள்

இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவு 1992 இன் சிஎஉ 13,370 இலட்சத்திலிருந்து (ரூ. 825,920 இலட்சம்) 1993 இல் சிஎஉ 15,430 இலட்சத்துக்கு (ரூ. 1,039,510 இலட்சம்) 15 சதவீதத்தால் அதிகரித்தது. வளமாக்கி, இரசாயனம், புடைவைகள் மற்றும் ஆடைகள், கோதுமைத்தானியம், தாள் மற்றும் தாள் அட்டைகள் என்பனவற்றில் முக்கிய அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழிலின் விரிவாக்கத்திற்கு இசைவாக புடைவை மற்றும் ஆடைகளின் இறக்குமதி மீதான செலவு சிஎஉ 760 இலட்சத்தால் (ரூ. 81,880 இலட்சம்) சிஎஉ 6,190 இலட்சத்திற்கு அதிரித்து இடைநிலைப்பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பில் 37 சதவீதத்திற்கு வகைகூறியது. வேளாண்மை மற்றும் கைத்தொழிலில் ஏற்பட்ட அதிகரித்த வெளியீட்டு மட்டமானது

அட்டவணை 1.46

## இறக்குமதிகளின் முடிவுப் பயன்பாட்டுப் பகுப்பு 1991 – 1993

| வகை | | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் | | | பெறுமதி சிஎஉ பத்து இலட்சம் | | | மொத்த இறக்குமதிகளின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1991 | 1992 | 1993 (அ) | 1991 | 1992 | 1993 | 1991 | 1992 | 1993 |
| 1. நுகர்வுப் பொருட்கள் | ... | 32,357 | 32,197 | 37,370 | 571.6 | 521.4 | 554.6 | 25.6 | 21.0 | 19.3 |
| 1.1 உணவும் குடிபானமும் | ... | 16,749 | 18,396 | 20,066 | 295.9 | 297.9 | 297.8 | 13.2 | 12.0 | 10.4 |
| 1.1.1 அரிசி | ... | 1,589 | 2,852 | 2,386 | 28.1 | 46.2 | 35.4 | 1.3 | 1.9 | 1.2 |
| 1.1.2 மா | ... | 1 | 3 | 552 | – | – | 8.2 | – | – | 0.3 |
| 1.1.3 சீனி | ... | 5,138 | 4,952 | 5,621 | 90.8 | 80.2 | 83.4 | 4.1 | 3.2 | 2.9 |
| 1.1.4 ஏனையவை | ... | 10,020 | 10,589 | 11,507 | 177.0 | 171.5 | 170.8 | 7.9 | 6.9 | 5.9 |
| 1.2 ஏனையவை | ... | 15,607 | 13,801 | 17,304 | 275.7 | 223.5 | 256.8 | 12.3 | 9.0 | 8.9 |
| 2. இடைநிலைப் பொருட்கள் | ... | 64,265 | 82,592 | 103,951 | 1,135.2 | 1,337.4 | 1,542.6 | 50.7 | 53.8 | 53.7 |
| 2.1 பெற்றோலியம் | ... | 12,887 | 13,938 | 14,920 | 227.6 | 225.7 | 221.4 | 10.2 | 9.1 | 7.7 |
| 2.2 வளமாக்கி | ... | 2,430 | 2,366 | 3,108 | 42.9 | 38.3 | 46.1 | 1.9 | 1.5 | 1.6 |
| 2.3 இரசாயனம் | ... | 3,643 | 4,125 | 5,241 | 64.3 | 66.8 | 77.8 | 2.9 | 2.7 | 2.7 |
| 2.4 கோதுமை | ... | 3,303 | 4,549 | 5,609 | 58.3 | 73.7 | 83.2 | 2.6 | 3.0 | 2.9 |
| 2.5 புடவைகளும் ஆடைகளும் | ... | 20,611 | 33,552 | 41,740 | 364.1 | 543.3 | 619.4 | 16.3 | 21.9 | 21.6 |
| 2.6 ஏனையவை | ... | 21,391 | 24,062 | 33,333 | 377.9 | 389.6 | 494.7 | 16.9 | 15.7 | 17.2 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் | ... | 29,792 | 37,294 | 50,508 | 526.3 | 603.9 | 749.5 | 23.5 | 24.2 | 26.1 |
| 3.1 பொறியும் கருவியும் | ... | 11,881 | 17,098 | 22,378 | 209.9 | 276.9 | 332.0 | 9.4 | 11.1 | 11.6 |
| 3.2 போக்குவரத்துக் கருவி | ... | 7,607 | 7,889 | 15,012 | 134.4 | 127.7 | 222.8 | 6.0 | 5.1 | 7.8 |
| 3.3 கட்டடப் பொருட்கள் | ... | 6,840 | 7,936 | 9,341 | 120.8 | 128.5 | 138.6 | 5.4 | 5.2 | 4.8 |
| 3.4 ஏனையவை | ... | 3,464 | 4,371 | 3,777 | 61.2 | 70.8 | 56.1 | 2.7 | 2.8 | 2.0 |
| 4. பகுக்கப்படாத இறக்குமதிகள் | ... | 229 | 1,472 | 1,721 | 4.0 | 23.9 | 25.6 | 0.2 | 1.0 | 0.9 |
| மொத்த இறக்குமதிகள் (ஆ) | ... | 126,643 | 153,555 | 193,550 | 2,237.1 | 2,486.6 | 2,872.3 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) சீராக்கப்பட்டது.

மூலங்கள் : இலங்கைச் சுங்கம்,
கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம்,
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனமும்
ஏனைய முதன்மை வளமாக்கி இறக்குமதியாளர்களும்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
இலங்கை மத்திய வங்கி.

இரசாயனப்பொருட்கள் சிஉ 110 இலட்சத்தாலும் (ரூ. 11,150 இலட்சம்) வளமாக்கி சிஉ 80 இலட்சத்தாலும் (ரூ. 7,420 இலட்சம்) தாள் மற்றும் தாள் உற்பத்திகள் சிஉ 80 இலட்சத்தாலும் (ரூ. 8,530 இலட்சம்) இறக்குமதிகளை அதிகரிக்கச்செய்தது. இறக்குமதியின் அளவு மற்றும் விலை ஆகிய இரண்டிலும் அதிகரிப்புக்களைப் பிரதிபலித்த கோதுமைத் தானியத்தின் இறக்குமதிச் செலவு 1992 இன் சிஉ 740 இலட்சத்திலிருந்து (ரூ. 45,490 இலட்சம்) 1993 இல் சிஉ 830 இலட்சத்திற்கு (ரூ. 56,090 இலட்சம்) 12 சதவீதத்தால் அதிகரித்தது. சாயமிடல், நிறமூட்டல், தோல் பதனிடல், நிறமூட்டல் பொருட்கள் என்பனவற்றின் இறக்குமதிகள் சிஉ 30 இலட்சத்தால் (ரூ. 820 இலட்சம்) வீழ்ச்சியடைந்தன. பெற்றோலியத்தின் மீதான செலவு சிஉ 40 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தது. எனினும் ரூபா நியதிகளில் அதிகரிப்பு (ரூ. 9,820 இலட்சம்) பதிவு செய்யப்பட்டது.

### முதலீட்டுப் பொருட்கள்

முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிச்செலவு போக்குவரத்துக்கருவி மற்றும் பொறிகளின் அதிகரித்த இறக்குமதி காரணமாக 1992 இன் சிஉ 6,040 இலட்சத்திலிருந்து (ரூ. 372,940 இலட்சம்) 1993 இல் சிஉ 7,500 இலட்சத்திற்கு (ரூ. 505,080 இலட்சம்) 24 சதவீதத்தால் கணிசமானளவில் அதிகரித்தது. போக்குவரத்துக்கருவியின் இறக்குமதிப்பெறுமதி சிஉ 950 இலட்சத்தால் (ரூ. 71,230 இலட்சம்) அல்லது 74 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பிற்கான முக்கிய பங்களிப்புக் காரணியாக ஏயர்லங்காவின் புதிதாகச் சேவையில் ஈடுபடுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் இரண்டு வானூர்திகள், பொதுமக்களுக்கான போக்குவரத்து முறையை முன்னேற்றுவதற்காகப் பேருந்துக்களின் உடல்கோர்ப்புக்கள், புகையிரத பெட்டிகளும் என்பனவற்றின் இறக்குமதிகள் விளங்கின. விதிவிலக்கான இவ்விடயங்களின் பெறுமதி நீக்கப்படுமிடத்து முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிச்செலவு 1992 இனைவிட 4 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தது. இதேவேளை பொறி மற்றும் கருவியின் இறக்குமதிச்செலவு 1992 இன் சிஉ 2,770 இலட்சத்திலிருந்து (ரூ. 170,980 இலட்சம்) 1993 இல் சிஉ 3,320 இலட்சத்திற்கு (ரூ. 223,780 இலட்சம்) 20 சதவீதத்தால் அதிகரித்தது.

## வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை

இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை, வர்த்தகம் மற்றும் கொடுப்பனவுகள் முறையில் தற்போது நடைமுறையிலிருக்கும் தாராளமயமாக்கல் முறைமைக்குள் ஏற்றுமதிகளின் போட்டித்தன்மையை அதிகரிக்கத்தூண்டும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதன்மூலம் ஏற்றுமதிசார் வளர்ச்சியைத் தூண்டுவதில் தொடர்ந்தும் கவனம் செலுத்தியது. சுற்றாடல் மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காக அத்தியாவசியமாகக் கருதப்பட்ட ஒரு குறிப்பிட்ட விடயங்களுக்கு மட்டும் ஏற்றுமதி இறக்குமதி மீதான உரிமம் பெறவேண்டிய தேவைகளைப் பேணும் அதேவேளையில், வரிமுறையை இலகுவாக்கல் மற்றும் செலாவணிக்கட்டுப்பாட்டு விதிகளை மேலும் தளர்த்துதல் என்பனவற்றின் மூலம் மிகவும் தாராளமயமாக்கப்பட்ட வர்த்தக முறையை அடையும் நோக்கில் மேலும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. ஏற்றுமதித்துறையானது ஏற்றுமதி அமைப்பை பன்முகப்படுத்தல், கூடுதலான கூட்டப்பட்ட பெறுமதி கொண்ட ஏற்றுமதிகளை

விரிவடையச்செய்தல் என்பனவற்றை நோக்காகக்கொண்ட நிறுவனரீதியிலான ஆதரவுத்திட்டங்களுடன் நிதியியல் மற்றும் இறை ஊக்குவிப்புக்கள் என்பனவற்றின் கவர்ச்சிகரமான சலுகைகயையும்.தொடர்ந்து அனுபவித்தது. தாராளமயமாக்கப்பட்ட வர்த்தகம் மற்றும் கொடுப்பனவு முறைக்கான அரசின் கட்டுப்பாடு மீது ஏற்றுமதியாளர் வைத்த நம்பிக்கை, 1993 மாச்சிலிருந்து ஏற்றுமதிப் பெறுகைகளைத் தாயகமனுப்பல் மற்றும் ஒப்படைப்புத் தேவைகளை நீக்கியமை என்பனவற்றின் மூலம் மேலும் அதிகரிக்கப்பட்டது.

வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையின் ஓர் முக்கிய அம்சமாக இலங்கை இருபுடை மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு ஏற்பாடுகளில் தீவிரமாகப் பங்குபற்றியதன் மூலம் பன்னாட்டு சமூகத்துடன் இறுக்கமான வர்த்தக இணைப்புக்களைத் தொடர்ந்தும் பேணியது.

அட்டவணை 1.47

**1993 இல் முக்கிய இறக்குமதிகளின் அளவு**

மெற்றிக் தொன்கள்

| மாதம் | அரிசி | கோதுமை | சீனி | பெற்றோலியம் (மசகு எண்ணெய்) | வளமாக்கி |
|---|---|---|---|---|---|
| சனவரி ... | 22,205 | 52,185 | 41,680 | 186,217 | 35,973 |
| பெப்புருவரி ... | 9,290 | 52,027 | 34,075 | 59,843 | 48,892 |
| மாச்சு ... | 16,476 | 102,823 | 70,650 | 123,023 | 28,357 |
| ஏப்பிறல் ... | 19,309 | 155,159 | 50,852 | 185,718 | 38,570 |
| மே ... | 20,062 | 52,185 | 18,312 | 183,668 | 20,310 |
| யூன் ... | 8,084 | 18,680 | 59,386 | 184,069 | 49,190 |
| யூலை ... | 17,042 | 4,337 | 41,354 | 125,645 | 22,400 |
| ஓகத்து ... | 70 | 103,994 | 12,310 | 185,775 | 50,280 |
| செத்தெம்பர் ... | 85 | 99,878 | 24,620 | 59,046 | 37,245 |
| ஒற்றோபர் ... | 21,138 | 52,385 | 18,003 | 187,443 | 29,089 |
| நவெம்பர் ... | 36,555 | 46,483 | 18,750 | 127,313 | 71,527 |
| திசெம்பர் ... | 38,490 | 31,141 | 3,554 | 182,815 | 33,096 |
| மொத்தம் (அ) ... | 208,806 | 771,277 | 393,546 | 1,790,575 | 464,929 |

(அ) சீராக்கப்பட்டது

மூலங்கள் : இலங்கைச் சுங்கம்,
கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனமும் ஏனைய முதன்மை வளமாக்கி இறக்குமதிகளும்

## தீர்வைகளும் வரிகளும்

தீர்வை முறைகளை வலுப்படுத்தித் திருத்தியமைக்கும் நோக்குடன் புடவைகள் மீதான அனைத்துக் குறித்துரைக்கப்பட்ட தீர்வைகளும் 1993 ஏப்பிறலில் 100 சதவீத பெறுமான விகிதத் தீர்வைக்கு மாற்றப்பட்டதுடன் இது 1993 நவெம்பரில் 50 சதவீதத்திற்கு மேலும் குறைக்கப்பட்டது. பயிற்சிப்புத்தகங்கள், காலணி, குடைகள் குளிரூட்டிகள், உறையவைக்கும் பெட்டிகள், நீர் இறைக்கும் பம்புகள் போன்றவற்றை

உள்ளடக்கிய ஏனைய விடயங்கள் சார்பாக ஒன்றில் குறித்துரைக்கப்பட்ட அல்லது பெறுமான விகிதவரித் தீர்வைக்குட்பட்டிருந்த ஏனைய விடயங்கள் (எது கூடியதோ அது) நான்கு கட்டத் தீர்வை முறையின் கீழக் கொண்டுவரப்பட்டன. தீர்வைத் திரிபுகளைக் குறைக்கும் நோக்கில் படிப்படியான அணுகுமுறையைக் கருத்திற்கொண்டு, நான்கு கட்டத் தீர்வை முறையின் கீழான அதிகூடிய தீர்வை வீதம் 1993 நவெம்பரிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் 50 சதவீதத்திலிருந்து 45 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. இதே வேளை தேங்காயெண்ணெய்க் கைத்தொழிலிலிருந்து எழும் கேள்வியை ஈடுசெய்வதற்காக அரைக்கும் தரத்திலான உலர்த்திய தேங்காய் மீதான இறக்குமதித் தீர்வை 50 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. உணவிற்கான எண்ணெய்கள் மீதான இறக்குமதித்தீர்வையும் 1993 மாச்சில் 20 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. போக்குவரத்து சம்பந்தமான சில வகைக்கான தீர்வைகளும் 1993 இல் கீழ்நோக்கித் திருத்தப்பட்டன.

முக்கிய மரபுவழி வேளாண்மை ஏற்றுமதிகள் 1992 இறுதியிலிருந்து நடைமுறைக்கு வந்த சகல பெறுமான விகித விற்பனை வரிகள் மற்றும் ஏற்றுமதித்தீர்வைகள் என்பனவற்றை நீக்குவதன்மூலம் கிடைத்த நன்மையைத் தொடர்ந்தும் அனுபவிக்கையில் 1993 இல் ஏற்றுமதி வரிகள் மற்றும் வேத்துரிமைகள் தொடர்ந்தும் மாறாதிருந்தன.

## இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாடு

தாராளமயமாக்கப்பட்ட வர்த்தகக் கொள்கைக்கிணங்க தேசிய பாதுகாப்பு, பொதுமக்கள் நலம், பொதுமக்கள் ஒழுக்கமுறை, சுற்றாடல், என்பனவற்றைக் கருத்திற்கொண்டு நியாயப்படுத்தத்தக்கவை நீங்கலான பெரும்பாலான இறக்குமதி, ஏற்றுமதிகளுக்கான உரிமத்தேவைகள் பலவற்றை இலங்கை ஏற்கனவே நீக்கியுள்ளது. ஏற்றுமதிகளைப் பொறுத்தமட்டில் முக்கியமாக சுற்றாடல் காரணங்களுக்காக 11 விடயங்களுக்கு மட்டும் உரிமம்பெறும் தேவைகள் மட்டுப்படுத்தப்பட்டன. உருளைக்கிழங்கு, சின்னவெங்காயம், பம்பாய் வெங்காயம், உழுந்து, செம்பருப்பு, மிளகாய், பலவகையான அரிசிகள் என்பனவற்றை உள்ளடக்கிய பலதரப்பட்ட வேளாண்மை உற்பத்திகள், ஆபரணப்பொருட்கள் மற்றும் அவற்றின் பகுதிகள், சில குறிப்பிடப்பட்ட உந்து ஊர்திகள், நிழற்படக் கருவிகள், உருளைவடிவிலான அல்லது தட்டைவடிவிலான அச்சுத்தாள்கள், புகைப்பட அல்லது சினிமாப்படச்சுருள்கள் என்பவற்றுக்கான இறக்குமதி உரிமம் பெறும் தேவைகள் 1993 இல் நீக்கப்பட்டன. எனினும் 1993 இல் சிலவகையான டீசல் பொறிகள் மற்றும் 3 வருடங்கள் பாவிக்கப்பட்ட உந்துஊர்திகள் என்பனவற்றின் இறக்குமதி மீது உரிமம் பெறுவதில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

## கப்பற் கட்டண வீதங்கள்

1990 இல் கப்பற்படுத்தல் பணிகளைத் தாராளமயமாக்கியதைத் தொடர்ந்து கப்பற்படுத்தும் நிறுவனங்களுக்கிடையே ஏற்பட்ட கடுமையான போட்டி காரணமாக அநேகமாக சகல முக்கிய ஏற்றுமதிகள் மீதான கப்பற்கட்டண வீதங்கள் 1993 இல் தொடர்ந்தும் ஓர் கீழ் நோக்கிய போக்கைக்காட்டின. கப்பற் கட்டண வீதங்களைக்

கீழ்நோக்கிக் கொண்டு வருவதற்குப் பங்களிப்புச்செய்த மற்றொரு காரணியாக, சிக்கனத்துடன் தொழிற்படும் பாரிய கப்பற்படுத்தும் நிறுவனங்களைக் கவர்ந்த கொழும்புத்துறைமுகத்திலிருந்த கொள்கலன் தரிப்பிடத்தின் முன்னேற்றங்கள் விளங்கின. பொருட்கள் மற்றும் சேருமிடங்களின் அடிப்படையில், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கான தேயிலைக்கான கப்பற் கட்டண வீதங்கள் ஒவ்வொன்றும் 10 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருக்கையில் பிரான்சு, கனடா, அவுத்திரேலியா என்பனவற்றுக்கான வீதங்கள் முறையே 17 சதவீதம், 21 சதவீதம் 37 சதவீதம் என்பனவற்றால் வீழ்ச்சியடைந்தன. இவ்வாண்டில் ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்க நாடுகள், பிரான்சு என்பனவற்றுக்கான இறப்பர் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளுக்கான கப்பற் கட்டண வீதங்களும் வீழ்ச்சியடையும் போக்கைக் காட்டின.

**ஏற்றுமதிகளுக்கான ஊக்குவிப்புக்கள்**

ஏற்றுமதித்துறை 1993 இல் நிறுவனரீதியான ஆதரவுத் திட்டங்களுடன் பல கவர்ச்சிகரமான நிதியியல் மற்றும் இறை ஊக்குவிப்புக்களைப்பெற்று தொடர்ந்தும் முன்னேற்றப்பட்டது.

இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளைக் கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக ஏற்றுமதியாளர்களுக்கு 1992 இல் வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களுக்கான வாய்ப்பு, வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளுக்குப் பதிலாக வர்த்தக வங்கிகளின் உள்நாட்டுப் பிரிவுகளிலிருந்து கடன்கள் பெறப்படவேண்டும் என்ற சிறு மாற்றத்துடன் 1993 இலும் தொடர்ந்தது. இவ்வசதி விடயத்தினடிப்படையில் ஏற்றுமதி அபிவிருத்திச்சபையின் விதந்துரைப்பின் பேரில் மறைமுகமான ஏற்றுமதியாளர்களுக்கும் மற்றும் கூட்டப்பட்ட பெறுமதியில் ஏற்றுமதி செய்பவர்களுக்கும் தொடர்ந்து கிடைக்கத்தக்கதாக இருந்தது.

மொத்த விற்பனைவரி, வருமானவரி, பொறி மற்றும் கருவி உட்பட இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளைத் தீர்வையற்ற முறையில் பெறுதல் போன்றவற்றில் சலுகைகளை உள்ளடக்கிய கவர்ச்சிகரமான இறை ஊக்குவிப்புக்கள் மரபு வழியற்ற ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்டன. குறிப்பாக சிறிய அளவிலான ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட தயாரிப்பாளர்களுக்கு ஏற்றுமதி அபிவிருத்திச்சபையால் வழங்கப்பட்ட நிதியியல் உதவித்திட்டங்கள் 1993 இலும் தொடர்ந்தன. முன்னோடித்தன்மைகொண்ட ஏற்றுமதிச் செயற்றிட்டங்களின் மீதான முதலீடுகளும் ஏற்றுமதி அபிவிருத்திச்சபையால் வழங்கப்பட்ட கவர்ச்சிகரமான ஒன்றுசேர்ந்த ஊக்குவிப்புக்கள் மூலம் தொடர்ந்தும் தூண்டுதலளிக்கப்பட்டன.

கூட்டிய பெறுமதிகளை அதிக அளவிற் கொண்ட ஏற்றுமதிகளை முன்னேற்றும் நோக்கில், தயாரிக்கப்பட்ட இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதியாளர்களுக்கு ஒரு ஊக்குவிப்புத் திட்டம் 1993 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. பதனிடப்படாத இறப்பர் ஏற்றுமதிகள் மீது கிலோக்கிறாமிற்கு 50 சதம் வரி விதிக்கப்பட்டு அதிலிருந்து பெறப்பட்ட சேகரிப்பு இறப்பர் உற்பத்திகளைத் தயாரிக்கும் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்டது. ஏற்றுமதியாளர்களுக்குத் தேவைப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளை தீர்வையற்ற முறையில்

வழங்கும் ஓர் நடவடிக்கையாக தயாரிப்பிற்காக சுங்கப்பிணையிலிடப்பட்ட திட்டம், பொருட்களின் தீர்வையற்ற பதிலீட்டுத்திட்டம், சுங்கத்தீர்வை தள்ளுபடித்திட்டம் என்பனவற்றை உள்ளடக்கிய பல திட்டங்கள் 1993 இலும் தொடர்ந்தும் தொழிற்பட்டன.

மதியுரைப்பணிகளும் தொழில்நுட்ப உதவியும், சந்தை அளவீடும் சந்தையின் உள்ளார்ந்த வள அபிவிருத்தி மீதான பன்முகப்படுத்தல் மீதான தகவலைப்பரப்புதலும், தரக்கட்டுப்பாடும் பொதியிடலும், மற்றும் வெளிநாட்டில் நடைபெறும் வர்த்தகக் கண்காட்சியில் பங்குபற்றுவோருக்கான நிதி உதவி என்பனவற்றை உள்ளடக்கிய பரவலான ஏனைய பணிகளையும் ஏற்றுமதி அபிவிருத்திச்சபை ஏற்றுமதியாளருக்குத் தொடர்ந்தும் வழங்கியது.

இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஏற்றுமதியாளர்களுக்கு உதவுமுகமாகக் காப்புறுதிப் பத்திரங்களையும் வங்கிப்பிணைகளையும் 1993 இல் தொடர்ந்தும் வழங்கியது. வழங்கப்பட்ட காப்புறுதிப்பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை 64 சதவீதத்தால் 74 இற்கு அதிகரித்திருக்கையில் பத்திரங்களின் பெறுமதி 66 சதவீதத்தால் ரூ. 3,430 இலட்சத்திற்கு அதிகரித்தது. வழங்கப்பட்ட வங்கி உத்தரவாதங்களின் எண்ணிக்கை 178 இலிருந்து 430 இற்கு இரு மடங்கிற்கும் மேலாக அதிகரித்திருக்கையில் அவ்வுத்தரவாதங்களின் பெறுமதி 1992 இன் ரூ. 3,750 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 6,500 இலட்சத்திற்கு அதிகரித்தது. வர்த்தக, பொருளாதார அரசியல் ஆபத்து காரணமாக வெளிநாட்டிலுள்ள வாங்குனர்களால்/முகவர்களால் கொடுப்பனவு தாமதிக்கப்படுதல் அல்லது பெறப்படாமைக்கு எதிராக வங்கி உத்தரவாதங்களையும் காப்புறுதிப்பத்திரங்களையும் வழங்குவதன் மூலமும் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களையும் உள்ளடக்கும் வகையில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அதன் காப்புறுதிப் பத்திரங்களையும், வங்கி உத்தரவாதங்களையும் 1993 மாச்சில் விரிவுபடுத்தியது.

**வர்த்தக ஒழுங்குகளும் வர்த்தக உறவுகளும்**

தீர்வைகள் மற்றும் வர்த்தகம் மீதான பொது உடன்படிக்கை (தீவமீபொஉ) உட்பட பொருளாதார அபிவிருத்தி மற்றும் வர்த்தகம் மீதான பல பல்புடை அமைப்புக்களில் இலங்கை ஒரு உறுப்பினராக இருக்கின்றது. பன்னாட்டு வர்த்தகத் தடைகளைக் குறைப்பதற்கும் மற்றும் உலகளாவிய வர்த்தகப் விரிவாக்கத்துக்குமாக தீ.வ.மீ.பொ.உ. இன் கீழான பல்புடை வர்த்தக பேச்சுவார்த்தைகளின் தொடரில் எட்டாவதாக விளங்கும் உருகுவே சுற்று வட்டம் ஏழு வருடங்களின் பின்பு 1993 திசெம்பர் 15 இல் முற்றுப்பெற்றது. இது வேளாண்மை, புடைவையும் ஆடையும், பணிகளிலுள்ள வர்த்தகம், வர்த்தகம் தொடர்பான முதலீட்டு அளவீடுகள், அறிவுசார்ந்த சொத்து உரிமைகளின் வர்த்தகம் சார்ந்த விடயங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய பல விடயங்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது. இவ்வுடன்படிக்கையின் பொதுவான தாக்கம் குறைக்கப்பட்ட தீர்வைகளும் தீர்வையல்லா வழிமுறைகளும், பலப்படுத்தப்பட்ட வர்தகக விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளுடன் இணைந்து உலகளாவிய வர்த்தகத்தில் விரிவாக்கத்தை ஏற்படுத்தியிருக்குமாகையால் இலங்கை உட்பட சகல அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கும் நன்மைபயப்பதாக அமையுமென

எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் இலங்கைக்கான உடன்படிக்கையின் முக்கிய கவனத்திற்குரியவற்றுள் ஒன்றாக 1995 இலிருந்து 2005 வரையான 10 ஆண்டு மாற்றமுறும் காலத்தின் பின்னர் பல்நூலிழை உடன்படிக்கையை (பநூஉ) படிப்படியாக நிறைவேற்றல், புடைவைகள் மற்றும் ஆடைகள் துறையை தீவமீபொ. உடன்படிக்கையுடன் இணைத்தல் என்பன விளங்கின. இலங்கையில் புடைவை மற்றும் ஆடைகள் கைத்தொழில் இவ்மாற்றத்திற்குட்படும் காலப்பகுதியில் பாதகமாகப் பாதிக்கப்படாவிட்டாலும் பல்நூழிழை உடன்படிக்கை முழுமையாக நிறைவேற்றப்பட்டதும் அனுமதிப்பங்கினால் வழங்கப்பட்ட பாதுகாப்பு நீக்கப்படுவதிலிருந்து எழும் முக்கிய சவால்களுக்கு அது தன்னைத் தயார்படுத்த வேண்டியுள்ளது.

ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம், கனடா, நோர்வே, பின்லாந்து, ஐக்கிய அமெரிக்கநாடுகள் என்பனவற்றுடனான பல்நூலிழை உடன்படிக்கையின் வரைச்சட்டத்தினுள் இருபுடை புடைவை ஒப்பந்தங்களை இலங்கை தொடர்ந்து பேணி வந்ததுடன் இந்த பல்நூலிழை உடன்படிக்கையானது ஏற்றுமதி செய்யப்படும் குறித்துரைக்கப்பட்ட ஆடை ஏற்றுமதி வகைகளின் மீது தொகைக் கட்டுப்பாடுகளை விதித்தது. நான்கு வகைகளைக் கட்டுப்பாட்டினுள் கொண்டிருந்த ஐரோப்பிய பொருளாதார சமூகத்துடனான ஒப்பந்தத்தின்கீழ் புடைவைகளின் அனைத்து வகைகளுக்கும் 1992 இன் அடிப்படை மட்டத்தினைவிட 1993 இல் சராசரி 10 சதவீத அதிகரிப்புப் பெறப்பட்டது.1993 சனவரியிலிருந்து பயனுறும் வகையில் கனடாவுடனான புடவை ஒப்பந்தம் இன்னுமொரு ஆண்டுக்கு நீடிக்கப்பட்டுள்ளதோடு பலவகைகளுக்கு அடிப்படை மட்டங்களைவிடக் கணிசமான அதிகரிப்புக்கள் பெறப்பட்டுள்ளன. ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் பின்லாந்து என்பனவற்றுடனான நடைமுறை ஒப்பந்தங்களும் 1994 வரை நீடிக்கப்பட்டுள்ளவேளையில் நோர்வேயுடனான ஒப்பந்தம் மேலும்இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. எனினும் உருகுவே ஒப்பந்தத்தின் நடைமுறைப்படுத்தலைத் தொடர்ந்து வர்த்தகம் மற்றும் தீர்வை தொடர்பான பொது ஒப்பந்தத்தினுள் படிப்படியாக ஒருங்கிணைக்கப்படும் என்பதற்கு உட்பட்டு பல்நூலிழை உடன்படிக்கையானது மாற்றமுறும் முழுமையான காலத்திற்குத் தன்னியக்கமாக நீடிக்கப்படும்.

வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கியநாடுகள் மாநாடு (வஅமீமா), பன்னாட்டு கோப்பி உடன்படிக்கை (கோஉ), இயற்கை இறப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் ஒன்றியம் (இஇஉசெநாஒ), பன்னாட்டு இயற்கை இறப்பர் உடன்படிக்கை (பஇஇஉ) என்பனவற்றில் இலங்கை தொடர்ந்தும் ஒரு உறுப்பினராக விளங்கியது. கோப்பி உற்பத்தியாளர் மற்றும் பாவனையாளர்களிடையே பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான ஓர் ஒன்றியமாகப் ப.கோ உடன்படிக்கையைப் பேணும்பொருட்டும் புதிய பேச்சுவார்த்தைக்காக நேரத்தை அனுமதிப்பதற்குமாகவும் 1993 ஒற்றோபரிலிருந்து மேலும் ஒரு வருடத்திற்குப் பன்னாட்டு கோப்பி உடன்படிக்கை நீடிக்கப்பட்டது. இதன்படி நீடிக்கப்பட்ட உடன்படிக்கையில் இலங்கை தொடர்ந்தும் பங்குபற்ற வேண்டுமெனத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இலங்கை அபிவிருத்தி அடைந்துவரும் ஒரு நாடென்ற வகையில் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை முறையின் கீழ் விசேட அணுகுமுறையைப் பெறுகின்றது. புதிய அரசுகள் உருவாகுவதன் காரணமாக

பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை முறைத் திட்டங்கள் பலவற்றின்கீழ் நன்மையடைவோரின் பட்டியல் விரிவாக்கப்பட்டது. 1993 மேயில் ஜெனிவாவில் நடைபெற்ற முன்னுரிமை முறை மீதான சிறப்புக் குழுவின் இருபதாவது அமர்வில் பொ. மு. முறையின் நடைமுறைப்படுத்தல், பேணல், முன்னேற்றம், பயன்பாடு என்பனவற்றை உள்ளடக்கிய பல விடயங்கள் மீளாய்வு செய்யப்பட்டன. இவ்வமர்வில் இலங்கையிலிருந்தான சில குறிப்பிட்ட பொருட்களின் மீது பொதுமுறையின் கீழ் மேலும் சலுகைகளைப் பெறும் நோக்கில் இலங்கை, பன்னாட்டுச் சமூகம், சுவீடன், நோர்வே, ஐ.அ. நாடுகள் என்பனவற்றுடன் இருபுடை ஆலோசனைகளை நடாத்தியது. இலங்கைக்கான ஐ. அ. நாடுகளின் பொ.மு.மு. செயற்றிட்டம் 1993 யூலையிலிருந்து மேலும் 15 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது. வெட்டுப்பூக்கள், இலைவகைச் செடிகள், பின்னப்பட்ட ஆடைகள் என்பனவற்றுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் தொடர்பான ஒழுங்கு விதிகளை அவர்களது நடைமுறை பொமு முறைத்திட்டத்தின் கீழ் தாராளமயப்படுத்தும்படி ஐ. பொ. சமூகத்தை இலங்கை கேட்டுக்கொண்டது.

பிராந்திய வர்த்தக ஒப்பந்தங்கள் பலவற்றில் இலங்கையும் ஒரு உறுப்பினராகும். பாங்கொக் ஒப்பந்தத்தின்கீழ் சில ஏற்றுமதிகளின் மீது முன்னுரிமைத் தீர்வை நியதிகளின்படி இலங்கை நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுகின்ற வேளையில் ஏனைய சில உறுப்பினர் நாடுகளிலிருந்தான சில இறக்குமதிகளுக்கும் இதே வகையான நன்மைகளை வழங்குகின்றது.

தெற்காசிய பிராந்தியக் கூட்டுறவு அமைப்பின் (சார்க்) தொடக்க உறுப்பினர் என்றவகையில் இலங்கை தெற்காசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைக் கூட்டங்களில் தொடர்ந்து பங்குகொண்டது. இவ்வுடன்படிக்கையானது உறுப்பினர் நாடுகளுக்கிடையில் பரசுபர சலுகைகளின் ஊடாகப் பிராந்திய வர்த்தக விரிவாக்கத்தை நோக்கமாகக் கொண்டுள்ளது. தெற்காசிய முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான உடன்படிக்கையொன்று 1993 ஏப்பிறலில் கைச்சாத்திடப்பட்டதுடன் சலுகை அட்டவணைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக வேண்டி வர்த்தகத் தளர்த்தல்மீது அரசுகளுக்கிடையேயான கூட்டமொன்று 1993 நவெம்பரில் கொழும்பில் நடாத்தப்பட்டது.

உறுப்பினர் ஒருவர் என்ற வகையில் இலங்கையும் பங்குபற்றிய ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி க் கருத்தரங்கின் எட்டாவது கூட்டத்தொடரைத் தொடர்ந்து வறுமை ஒழிப்பு, அபிவிருத்தி நாடுகளுக்கிடையிலான பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் பண்டங்களின் வர்த்தகம் என்பன தொடர்பாக நிலையியற் குழுவொன்று நிறுவப்பட்டது. முதலீடு மற்றும் நிதிப்பாய்ச்சல், வர்த்தகத் திறமை போன்ற விடயங்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான செயற்பாட்டுக்குழுக்களும் நிறுவப்பட்டன. ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் அபிவிருத்திக் கருத்தரங்குகளினால் தொடக்கி வைக்கப்பட்ட வர்த்தகத் திறமைத் திட்டத்தின்கீழ் இலங்கையில் 'வர்த்தக மத்திய நிலையம்' ஒன்றினை நிறுவுவதற்கான சாத்தியக் கூறுகள் சம்பந்தமாகவும் வர்த்தகம் மற்றும் குறைந்த செலவிலான வர்த்தக நடவடிக்கைகள் என்பனவற்றிற்கு வசதி செய்து கொடுப்பதற்காக இணைக்கப்பட்ட குவியமையத்தின் கீழ் வர்த்தகம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்பது தொடர்பாகவும் கருத்திற்கொள்ளப்பட்டது.

வர்த்தக முன்னுரிமை பொதுச்செயல்முறை ஒப்பந்தத்தில் இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளது. 1992 யூலையில் தொடங்கப்பட்ட வர்த்தக முன்னுரிமை பொதுச்செயல்முறை ஒப்பந்தத்தின் இரண்டாவது சுற்று 1993 ஆம் ஆண்டு முழுவதும் தொடர்ந்ததோடு உறுப்பினர் நாடுகளுக்கிடையில் தீர்வையற்ற தடைகளை ஆகக்குறைந்ததாக்குவதற்கான பேச்சுவார்த்தைகளும் மேற்கொள்ளப்பட்டன.

வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப கூட்டுறவு என்பனவற்றை மேம்படுத்தும் வழிமுறையொன்றாக சீனா, வங்காளதேசம், எகிப்து, இந்தியா, ஈரான், ஈராக், லிபியா, மாலைதீவு, பாக்கித்தான், ரூமேனியா, துருக்கி ஆகியநாடுகளுடன் இருபுடை ஒப்பந்தங்கள் பலவற்றில் இலங்கை பங்குகொண்டது. பொருளாதார கூட்டுறவு தொடர்பான இலங்கை - வங்காளதேசக் கூட்டு ஆணைக்குழுவின் மூன்றாவது கூட்டத்தொடரும் இலங்கை - இந்திய கூட்டுஆணைக்குழுவின் பூர்வாங்க கூட்டமும் 1993 இல் நடாத்தப்பட்டன.

சுதந்திர நாடுகளின் பொதுநலவாயத்தில் ஐந்து நாடுகளுக்கான வர்த்தக மேம்பாட்டு தூதுக்குழுவொன்றினைத் தொடர்ந்து ரஷ்யக் கூட்டாட்சி, கசகஸ்தான் உக்ரேன், பெலுரியஸ் ஆகிய நாடுகளுடன் இணக்க ஆவணங்கள் கைச்சாத்திடப்பட்டன.

## உள்நாட்டு வர்த்தகம்

போட்டியான வர்த்தகச் சூழலில் தனியார்துறையினரை ஊக்குவிக்கின்ற வேளையில் நுகர்வோருக்குப் பாதுகாப்பு வழங்குவதை உறுதிப்படுத்துவதே உள்நாட்டு வர்த்தகக் கொள்கையின் முக்கிய குறிக்கோளாக விளங்கியது. இக்குறிக்கோளினை எய்தும் நோக்கில் வர்த்தக மோசடிகளை இல்லாதொழிப்பதன் மூலமும் நுகர்வுப் பொருட்களினதும் பணிகளினதும் போதுமான வழங்கலை உறுதிப்படுத்துவதன் மூலமும் தரங்களுக்கான குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டல்களை வழங்குவதன்மூலமும் வர்த்தகத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதில் உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம் ஈடுபட்டிருந்தது. 1993 இல் மருந்தாக்கற் பொருட்களுக்கு மட்டுமே விலைக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டதோடு இவை நியாயவர்த்தகக் குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட ஆகக்கூடிய சில்லறை விலைக்கு உட்பட்டவையாகக் காணப்பட்டன. உள்நாட்டில் தயாரிக்கப்படும் சீமெந்து, நிருமாண உருக்குப் பாளங்கள் மற்றும் உருக்குக் கம்பிகள், கல்நார்த்தகடுகள் என்பனவற்றை உள்ளடக்கிய உற்பத்திப்பொருட்கள் தொடர்பாக இலங்கை தரக்கட்டுப்பாடுகளைப் பேணுவதற்காக நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. மேலும் இறக்குமதிசெய்யப்படும் இதே வகையான பொருட்களும் இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தினால் தொழிற்படுத்தப்படும் இறக்குமதி மேற்பார்வைத் திட்டத்தின்கீழ் மேற்பார்வை செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்படல் வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டது. 1993 இறுதியில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் சமூக வாழ்வுக்கு அத்தியாவசியமானவை என 518 பொருட்கள் குறித்துரைக்கப்பட்டதோடு இவற்றிற்கான பெயர் அட்டைகள், விலைகள், சந்தைப்படுத்தல் என்பனவும் குறித்துரைக்கப்பட்டன. உற்பத்தி, பகிர்ந்தளிப்பு, சந்தைப்படுத்தல் தொடர்பாக நுகர்வோருக்கு அறிவூட்டுவதற்காக உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்தினால் நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டதோடு கிராமிய மட்டத்திலான நுகர்வோர் சங்கங்களை நிறுவுவதையும் அது தொடர்ந்தும் மேற்கொண்டது.

1993 இல் நியாய வர்த்தக ஆணைக்குழு தனியுரிமை மற்றும் இணைப்பு நிலைமைகளைப் புலனாய்வு செய்தல் பலதரப்பட்ட கைத்தொழில் உற்பத்திகளுக்கு விலை நிர்ணயித்தல், போட்டிக்கு மாறான நடவடிக்கைகள், குவித்தல் என்பன சம்பந்தமாகத் தனது நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டது. ஆணைக்குழு இவ்வாண்டில் தீக்குச்சிக் கைத்தொழிலும் உற்பத்தியும், ஒட்சிசனின் பகிர்ந்தளிப்பும் விற்பனையும் என்பன தொடர்பாக தனியுரிமைப் புலனாய்வுகளை மேற்கொண்டது. சவர்க்காரம், பயிற்சிப் புத்தகங்கள், ஈருருளி ரயர்கள், மென்பானங்கள், ஒட்சிசன், முழுஆடைப்பால்மா என்பன தொடர்பான புலனாய்வுகளும் நியாய வர்த்தக ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டன. மேலும் திரவக்குளுக்கோசு மற்றும் உருக்கு என்பனவற்றின் குவிப்பு தொடர்பான குற்றச்சாட்டுக்களும் புலனாய்வு செய்யப்பட்டன. எனினும் திரவக் குளுக்கோசின் குவிப்பு தொடர்பாகப் போதுமான ஆதாரங்கள் இல்லாது காணப்பட்டவேளையில் உருக்கு தொடர்பாகப் பொருத்தமான தீர்வைச்சீராக்கத்தினை நடைமுறைப்படுத்தவும் உருக்கு உற்பத்திப்பொருட்களின் மீது தரக்கட்டுப்பாடுகளை விதிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1993 இல் பண்டக்கொள்வனவுத் திணைக்களம் இறப்பர் விலைகளை நிருணயித்தல் தட்டை இறப்பரின் கொள்வனவும் விற்பனையும் என்பன தொடர்பாக தனது நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டது. தட்டை இறப்பர் வர்த்தகத்தில் திணைக்களம் தனியார்துறை வர்த்தகர்களிடமிருந்தான போட்டியை எதிர்கொள்ள வேண்டியிருந்ததோடு இறப்பரைத் தரப்படுத்துவதற்கான நடவடிக்கை முறைகளை இலகுபடுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சிறுஉடைமை இறப்பர் உற்பத்தியாளர்களுடனான தொடர்புகளை உறுதிப்படுத்தலும், தரங்களைப் பேணுவது தொடர்பாக அவர்களுக்கு அறிவூட்டுவதும் கொள்வனவு டிப்போக்களைத் திறந்துவைத்தலும், இடம்பெயர் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்துவதும் 1993 இல் பண்டக்கொள்வனவுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் உள்ளடங்கியிருந்தன.

## சுற்றுலா*

1993 இல் சுற்றுலாத்துறை கலப்பான செயலாற்றத்தைக் காட்டியது. சுற்றுலாப் பயணிகளின் வருகையில் சிறிதளவு வீழ்ச்சி காணப்பட்ட போதிலும் சுற்றுலா இரவுகளின் எண்ணிக்கை, வெளிநாட்டுச்செலாவணி வருவாய்கள், சுற்றுலாத்துறையிலான வேலைவாய்ப்பு வசதிகள் என்பன 1993 இல் முன்னேற்றங்களைக் காட்டின. 1992 இல் சுற்றுலாப் பயணிகளினது வருகைகளின் எண்ணிக்கை 1984 இற்குப்பின் அதிகூடிய மட்டமான 393,669ஐ அடைந்தது. இக்கூடிய மட்டத்துடன் ஒப்பிடுகையில் 1993 இல் சுற்றுலா வருகைகள் 392,250 ஆக விளங்கி 0.4 சதவீதங்கொண்ட ஒரு சிறிய வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. எனினும் வருகைகளில் வீழ்ச்சி காணப்பட்ட போதிலும் நாட்டில் சுற்றுலாப் பயணிகள் கழித்த இரவுகள் 1993 இல் 4,119,000 இற்கு 3 சதவீதத்தால் அதிகரித்தன.

ஆசிய அவுத்திரேலியா தவிர்ந்த எல்லா முக்கியப் பிராந்தியங்களிலுமிருந்தான சுற்றுலா வருகைகள் 1993 இல் அதிகரித்தன. கடந்த காலத்தினைப் போன்று மேற்கு ஐரோப்பா வருகை தருவோரின் முக்கிய மூலமாக அதன் முன்னனி நிலையைத்

* பகுப்பாய்வு இலங்கைச் சுற்றுலாச் சபையின் தற்காலிக மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது.

*அட்டவணை 1.48*

**சுற்றுலாப் பயணிகளின் புள்ளி விபரங்கள் 1992 - 1993**

| விடயம் | | 1992 | 1991 இனைவிட % மாற்றம் | 1993 (அ) | 1992 இனைவிட % மாற்றம் |
|---|---|---|---|---|---|
| 1. | சுற்றுலாப் பயணிகளின் வருகை ... | 393,669 | + 23.9 | 392,250 | - 0.4 |
| 2. | பிரதேச அடிப்படையிலான வருகைகளின் எண்ணிக்கை | | | | |
| 2.1 | ஐரோப்பா ... | 250,035 | + 27.0 | 256,158 | + 2.4 |
| 2.1.1 | பிரான்சு ... | 40,227 | + 9.3 | 34,779 | - 13.5 |
| 2.1.2 | சேர்மனி ... | 85,443 | + 31.0 | 95,430 | + 11.7 |
| 2.1.3 | இத்தாலி ... | 25,572 | + 35.3 | 18,267 | - 28.6 |
| 2.1.4 | ஐ.இ. ... | 34,602 | + 11.6 | 42,474 | + 22.7 |
| 2.1.5 | ஏனையவை ... | 64,191 | + 43.0 | 65,208 | + 1.6 |
| 2.2 | வட அமெரிக்கா ... | 12,615 | + 31.2 | 13,635 | + 8.1 |
| 2.2.1 | கனடா ... | 4,104 | + 24.1 | 4,062 | - 1.0 |
| 2.2.2 | ஐ. அ. நாடுகள் ... | 8,511 | + 34.9 | 9,573 | + 12.5 |
| 2.3 | ஆசியா ... | 114,162 | + 18.1 | 106,668 | - 6.6 |
| 2.3.1 | யப்பான் ... | 28,797 | + 23.0 | 20,421 | - 29.1 |
| 2.3.2 | இந்தியா ... | 25,941 | + 27.5 | 32,433 | + 25.0 |
| 2.3.3 | பாக்கித்தான் ... | 11,481 | + 10.5 | 12,369 | + 7.7 |
| 2.3.4 | கொங்கொங் ... | 8,370 | - 0.3 | 4,119 | - 50.8 |
| 2.3.5 | ஏனையவை ... | 39,573 | + 16.0 | 37,326 | - 5.7 |
| 2.4 | அவுத்திராலியா ... | 12,363 | + 26.8 | 11,823 | - 4.4 |
| 2.4.1 | அவுத்திரேலியா ... | 10,995 | + 24.9 | 10,242 | - 6.8 |
| 2.4.2 | நியூசிலாந்து ... | 1,161 | + 34.8 | 1,086 | - 6.5 |
| 2.4.3 | ஏனையவை ... | 207 | - 146.4 | 495 | + 139.1 |
| 2.5 | ஏனைய பிரதேசங்கள் ... | 4,494 | - 7.9 | 3,966 | - 11.7 |
| 3. | நோக்கங்களின்படியான வருகைகள் ... | 393,669 | + 23.9 | 392,250 | + 0.4 |
| 3.1 | களியாட்டம் ... | 373,215 | + 20.1 | 387,141 | + 3.7 |
| 3.2 | வியாபாரம் ... | 15,510 | + 171.2 | 4,089 | - 73.6 |
| 3.3 | ஏனையவை ... | 4,944 | + 289.3 | 1,020 | - 79.4 |
| 4. | சுற்றுலா இரவுகள் ('000) ... | 4,055 | + 21.5 | 4,158 | + 2.5 |
| 5. | இன்பப் பயணிகளின் வருகை ... | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. |
| 6. | மூலங்களின்படி மொத்தச் சுற்றுலாப் பெறுகைகள் (ரூ.ப.இ.) (அ) ... | 8,826 | + 37.1 | 10,000 | + 13.3 |
| 7 | மொத்த தொழில் வாய்ப்பு ... | 69,096 | + 7.1 | 75,000 | + 8.5 |
| 7.1 | நேரடி ... | 28,790 | + 7.1 | 30,000 | + 4.2 |
| 7.2 | மறைமுக ... | 40,306 | + 7.1 | 45,000 | + 11.6 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள் : இலங்கைச் சுற்றுலாச் சபை, இலங்கை மத்திய வங்கி

தொடர்ந்து பேணியதுடன் 1993 இல் மொத்த வருகைகளில் 64 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தது.

1993 இல் மேற்கு ஐரோப்பாவிலிருந்தான சுற்றுலா வருகைகள் 251,934ஐ அடைந்து 1992 இனைவிட 2 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தன. இது முக்கியமாகச் சேர்மனி, ஐக்கிய இராச்சியம், சுவீடனிலிருந்தான அதிகரித்த

வருகைகளால் ஏற்பட்டதாகும். 1992 இன் மொத்த வருகைகளில் 30 சதவீதத்திற்கு வகைகூறிய இரண்டாவது பெரிய சந்தையான ஆசியச்சந்தையிலிருந்தான வருகைகள் 1993 இல் 27 சதவீதத்திற்குத் வகைகூறி அதன் பங்கில் வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. ஆசியாவிலிருந்தான வருகைகளின் எண்ணிக்கை 1993 இல் 7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு சீனா (53 சதவீதம்), கொங்கொங் (51 சதவீதம்), தென்கொரியா (31 சதவீதம்), ஐப்பான் (29 சதவீதம்), தாய்வான் (21 சதவீதம்), என்பனவற்றிலிருந்தான, குறைந்த வருகைகள் முக்கிய காரணியாக விளங்கின. அதே போக்கினைத் தொடர்ந்து 1993 இல் அவுத்திரலாசியாவிலிருந்தான வருகைகள் 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. எனினும் கிழக்கு ஐரோப்பா, வடஅமெரிக்காவிலிருந்தான வருகைகள் முன்னைய ஆண்டைவிட 1993 இல் முறையே 16 சதவீதத்தாலும் 8 சதவீதத்தாலும் அதிகரித்தன.

1993 இல் சுற்றுலாவிலிருந்தான மொத்த வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் ரூ. 100,000 இலட்சமாக (சிஎஉ 1,480 இலட்சம்) மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இது 1992 இன் வருவாய்களைவிட 13 சதவீதம் (சிஎஉ நியதிகளில் 4 சதவீதம்). அதிகமானதாகும்.

1993 இல் சுற்றுலாக் கைத்தொழிலால் வழங்கப்பட்ட மொத்த வேலைவாய்ப்பு 75,000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இது முன்னைய ஆண்டைவிட 9 சதவீத வளர்ச்சியை எடுத்துக்காட்டியது. இது 30,000 நேரடித்தொழில் வாய்ப்புக்களையும், துணைத்துறையிலான 45,000 மறைமுகத் தொழில் வாய்ப்புக்களினையும் கொண்டுள்ளது.

தரமிடப்பட்ட தங்குமிடத்துறையில் சுற்றுலா விடுதிக் கூறுகளின் எண்ணிக்கை 1992 இன் 127 இலிருந்து 1993 இல் 129 இற்குச் சிறிதளவால் அதிகரித்தது. இதனால் மொத்த அறை இயலளவு 1992இன் 10,214 அறைகளிலிருந்து 1993 இல் 10,365 இற்கு அதிகரித்தது. இதேவேளை தரமிடப்பட்ட தங்குமிடத்துறையில் அறைகளில் தங்கும் ஆண்டுவீதம் 55 சதவீதத்திலிருந்து 57 சதவீதத்திற்கு அதிகரித்தது. துணைத் தங்குமிடத்துறையில் காணப்பட்ட கூறுகளின் எண்ணிக்கையிலும் இதே மேல் நோக்கிய போக்கு காணப்பட்டதுடன், இது 1992 இன் 128 இலிருந்து 1993 இல் 145 கூறுகளுக்கு 13 சதவீதத்தால் அதிகரித்தது.

சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் நோக்கரீதியான பகுப்பின்படி களியாட்டத்திற்கான வருகைகள் 4 சதவீதமான மிதமான அதிகரிப்பைக் காட்டிய வேளையில் வர்த்தக ரீதியான வருகைகள் 1992 இன் 15,510 இலிருந்து 1993 இல் 4,089 இற்குக் கடுமையாக வீழ்ச்சியடைந்தன.

பயண வருகைகளின் அடிப்படையில் அட்டவணையிடப்பட்ட பறப்புகளின் மூலமான சுற்றுலா வருகைகள் 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. அட்டவணையிடப்பட்ட பறப்புக்களில் பிரதேசங்களுக்கிடையிலான பறப்புக்கள் 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருக்கையில் பிரதேசங்களுக்குள்ளேயான பறப்புக்கள் 2 சதவீதத்தால் அதிகரித்தன. ஏயர்லங்கா மூலமான வருகைகளின் எண்ணிக்கை இவ்விரு ஆண்டுகளுக்கிடையில் 12 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.